**சீதாவக்க பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சீதாவக்க பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சபையினால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 78,835,788 பெறுமதியான கட்டிடம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் பொருள் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்பட்டு அகற்றப்பட்ட பொருட்களின் கிரயத்தை இனங்கண்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தூதுவர்களிடமிருந்து கிடைத்த காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்ட ‘‘தம்போற’’ இளைஞர் கல்வி நிலையக் கட்டிடத்தின் கிரயம் மற்றும் காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபை அதிகாரப்பிரதேசத்தில் களுஅக்கல கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்ட களியாட்ட பூங்காவின் உரிமையாளரால் சபைக்கு களியாட்ட வரி செலுத்தாமையின் அடிப்படையில் சபையினால் அவிசாவெல்ல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அந்தக் களியாட்ட பூங்கா உரிமையாளராலும் சபைக்கு எதிராக இன்னுமொரு வழக்கு தொடரப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 12 வரையும் அந்த வழக்கு சமரசத்திற்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 03 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் உபயோகப் புத்தகங்கள் / பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 1,419,072 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

**வீட்டு வாடகை வைப்பு**

1989 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய வீட்டு வாடகை உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 157,261 தொகையான வீட்டு வாடகை வைப்பினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு ரூபா 27,165 தொகையான 30 பாதணி சோடிகளை வழங்குவதற்காக பாதணி பெறப்பட்டதாக கையொப்பமிடப்பட்ட பெயர் பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 இனங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபையின் வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி சுற்றறிக்கை | | |
| (i) 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கை | - | கடை வாடகை மதிப்பீடு 03 வருடங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இறுதியாக 2012 ஆம் ஆண்டின் போதே கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 2016 யூலை 11 ஆந் திகதிய LGD/08/2016 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் ஆதனங்களை பௌதீக ரீதியில் இனங்காண்பதற்கும், நில அளவையாளர் மூலம் அளவீட்டைச் |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படவில்லை. |
| (இ) | ஏனைய சுற்றறிக்கை<br>1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை | 3,236,906 | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கில் காணப்படுகின்ற மீதிகளை இனங்கண்டு செயற்திட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 45,556,388 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,247,988 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 24,252,000 | 25,781,592 | 26,989,385 | 6,227,647 | 20,328,000 | 19,130,653 | 17,099,198 | 7,923,257 |
| வாடகை | 19,289,000 | 19,298,329 | 19,909,434 | 196,929 | 24,030,300 | 4,135,012 | 4,649,656 | 440,820 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,00,2,000 | 2,148,631 | 1,700,450 | - | 2,026,800 | 1,663,045 | 1,663,045 | - |

### 2.2.2 வீதவரியும் வரியும்

**(அ) ஆதனவரி**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 4,696,105 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 958,842 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை ஆதனவரி ஆகும்.

**(ஆ) ஏக்கர் வரி**

பாதுக்க உப அலுவலகத்தில் 2017 திம்பெர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி பெறுமதி ரூபா 178,980 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 127,250 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரியதாகும்.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்**

2014 யூலை முதல் 2017 திசெம்பர் வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணப் பெறுமதி ரூபா 43,000,000 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 222 ஆக இருந்ததுடன் ஆரம்ப மற்றும் இரண்டாம் தரங்களில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டன. உள்ளபடியான பதவியணியினர் 265 ஆக இருந்ததுடன் அதில் 64 பேர் அமைய அடிப்படையிலான ஊழியர்களாகும்.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஓய்வுபெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 500,910 தொகையான கடன் மீதியொன்று அறவிட வேண்டியிருந்தது.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2007 யூலை 25 ஆந் திகதி ரூபா 850,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரம் மற்றும் 2007 ஒக்தோபர் 17 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி இனங்காணப்படாத 02 இழுவைப் பெட்டிகள் குறைவான பயன்பாட்டுடன் ஹங்வெல்ல வேலைத் தளத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன வருமானம் / செலவினங்களை உள்ளபடியான வருமானத்துடனும் செலவினங்களுடனும் ஒப்பீடு செய்த போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்பிக்கப்படுகின்றது.

(அ) 34 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,940,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 23 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 101,059,000 தொகைகளில் 50 சதவீதத்தை விட குறைவாக செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையின் உள்ளகக் கணக்காய்விற்காக 2017 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவையின் மூதலாம் தரத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு கடமைகள் கையளிக்கப்பட்ட போதிலும், அந்தக் கடமைகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை |
| (இ) | இருப்பு | பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை மற்றும் முறையற்ற இருப்புப் பதிவேடு |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |